**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.01/2023**
**Prosecution Witness**:9

| Name | திரு.முருகன் (PW9 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2021ம் தேதி நான் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கொடுமுடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஸ்ரீராமன் அவர்கள் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்டு புலன் விசாரணை நிலுவையில் இருந்து வந்த கொடுமுடி காவல் நிலைய குற்ற எண்.365/2021 ச/பி.279, 337 இதச வழக்கில் காயம்பட்ட நபர் செல்வராஜ் என்பவர் 20.12.2021ம் தேதி அதிகாலை 04.10 மணிக்கு சேலம் அரசு மோகன்குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்ற நான் இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

2. வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 20.12.2021ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான கொடுமுடி – கரூர் மெயின்ரோடு வெங்கமேடு, பெட்ரோல் பங்க் அருகில் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் சம்பவ இடமானது சார்பு ஆய்வாளர் ஸ்ரீராமன் தயார் செய்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வைமகஜரில் கண்டுள்ளவாறு அமைந்துள்ளதால் நான் தனியாக எதுவும் தயார் செய்யவில்லை. சம்பவ இட சாட்சிகள் கார்த்திக் மற்றும் நெடுமாறன் மற்றும் பார்வை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:10:31 +0530

மகஜர் சாட்சிகளான ராஜா மற்றும் வீரமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரித்ததில் சார்பு ஆய்வாளர் ஸ்ரீராமன் விசாரணையில் கூறியதையே எனது விசாரணையிலும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அதன் பின்னிட்டு சேலம் அரசு மோகன்குமாரமங்களம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன செல்வராஜ் பிரதேத்தின் மீது காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இவ்வழக்கில் இறந்துபோன செல்வராஜ் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம்அறியும்பொருட்டு அவரது பிரேதத்தை சேலம் அரசு மோகன்குமாரமங்களம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு தலைமை காவலர் 2505 பாலமுருகன் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். சாட்சிகள் பார்வதி, கவின்குமார், செந்தில் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து அவர்களின் மறுவாக்குமூலத்தை பதிவு செய்தேன். சாட்சிகள் புஷ்பராஜ் மற்றும் பரமேஷ்வரி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 23.12.2021ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன செல்வராஜ் என்பவர் ஓட்டி சென்ற TVS XL Super TN 33 AT 6629 இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன். 06.01.2022ம் தேதி குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுமுடி காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவரை கைது செய்து திரேக பரிசோதனை செய்து தக்க பிணையில் விடுவித்தேன். 27.01.2022ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 59 AM 2125) அ.சா.ஆ.7 ஆகவும், அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 33 AT**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:10:35 +0530

**6629) அ.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே இவ்வழக்கில் இறந்துபோன செல்வராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த சேலம் அரசு மோகன்குமாரமங்களம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மகேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத பரிசோதனை வழிக்காவல் தலைமை காவலர் 2505 பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.03.2022ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மணிகண்டன் மீது ச/பி.279, 304(A) இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

பிரேத பரிசோதனை அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், ஆகியவற்றை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3) பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவ இடத்திற்கு எப்போது எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 20.12.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு சென்று பார்வையிட்டேன். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பெட்ரோல் பங்கில் CCTV கேமரா பொறுத்தப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.3 கார்த்தி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. புலன் விசாரணை முடித்து ஸ்ரீராமன் என்னிடம் அறிக்கை சமர்பித்த போது அ.சா.3 கார்த்தி என்ன சொன்னார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அ.சா.3 கார்த்தி குறுக்கு விசாரணையில் பெட்ரோல் பங்கில் CCTV கேமரா பொறுத்தப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார் அது பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் நாங்கள் விசாரித்தபோது அதை பற்றி எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. பெட்ரோல் பங்கில் CCTV கேமரா பொறுத்தப்பட்டுள்ளது, அதை அ.சா.3ம் ஒப்புக்கொண்டார் என்றாலும், ஆனால் நான் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவிக்கவில்லை என்றாலும் சரிதான். அதை நீதிமன்றத்திற்கு ஒப்படைக்காததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. CCTV கேமரா பதிவுகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் அது அரசு தரப்பிற்கு பாதகமாக அமையும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:10:40 +0530

என்பதால் நான் அதனை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், பிரேத விசாரணை செய்யவில்லை என்றாலும், உரிய முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சொன்னபடி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எதிரி கைது செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:10:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.